**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 133** **நாள்: 05.09.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள OFC கேபிள்களுக்கு உரிமையாளர்கள் மாநகராட்சியை அணுகி உடனடியாக தடவாடகை செலுத்தி அனுமதி பெறவேண்டும். தவறும்பட்சத்தில் கேபிள்கள் துண்டித்து அகற்றப்படும் என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

= = =

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் கண்ணாடி இழை கேபிள்கள் (OFC) மற்றும் தொலைக்காட்சி கேபிள்கள் முறைப்படுத்துதல் மற்றும் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள வடங்களை அகற்றுவது குறித்த ஆய்வுக்கூட்டம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (05.09.2019) ரிப்பன் மாளிகை கூட்டரங்கில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கண்ணாடி இழை கேபிள்கள் (OFC) மற்றும் தொலைக்காட்சி கேபிள்கள் அமைக்க, சுமார் 5316 கிலோ மீட்டர் நீளத்திற்கு 26 நிறுவனங்கள் அனுமதி பெற்றுள்ளன. இதுதொடர்பாக மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிடவும், அனுமதியின்றி சட்டத்திற்கு புறம்பாக அமைக்கப்பட்டுள்ள கேபிள்கள் குறித்தும், கணக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டது. அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 34,893 தெருக்களில் மாநகராட்சி பொறியாளர்களால் இதுநாள்வரை 8,505 தெருக்களில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வுகளின்படி, அனுமதியின்றி சுமார் 4,449 கி.மீ. நீளத்திற்கு கேபிள்கள் அமைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் மாநகராட்சியிடம் அனுமதி பெற்ற நிறுவனங்களில் 20 நிறுவனங்களால் அனுமதிக்கப்பட்ட அளவைவிட சுமார் 1,361 கி.மீ. நீள கேபிள்கள் நிறுவப்பட்டுள்ளன எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கணக்கீடுகள் அனைத்தும் நிலத்திற்கு மேற்பரப்பில் செல்லும் கேபிள்கள் குறித்த தகவல்கள் ஆகும். இதே போன்று நிலத்திற்கு கீழ் பதியப்பட்டுள்ள கேபிள்கள் மற்றும் அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டுள்ள கம்பங்கள் குறித்தும் தொடர்ந்து கணக்கிடும் பணிகள் நடைபெறவுள்ளதால், மேலும் கூடுதலான நீளத்திற்கு அனுமதியின்றி கேபிள்கள் அமைக்கப்பட்டிருக்கும் என கருதப்படுகிறது.

மாநகராட்சியிடம் குறிப்பிட்ட நீள அளவிற்கு அனுமதி பெற்று அதைவிட கூடுதலான அளவிற்கு கேபிள்கள் பதித்துள்ள நிறுவனங்கள் அவற்றிற்கான தடவாடகையை செலுத்தவும், மாநகராட்சியிடம் எந்தவித அனுமதியும் பெறாமல் கேபிள்கள் அமைத்துள்ள நிறுவனங்கள் அனுமதி பெறவும், தடவாடகையை செலுத்தவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. எனவே அனுமதி பெறவும், தடவாடகை செலுத்தவும் தவறும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கேபிள்கள் துண்டிக்கப்பட்டு இதுநாள் வரை பயன்படுத்தியதற்கான அபராத தொகையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (மின்சாரம்) திரு.பி.துரைசாமி, கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) திருமதி ஆர்.விஜயலட்சுமி, கோட்டப் பொறியாளர்கள், உதவி கோட்டப் பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**